விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 356 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 24 புதன்கிழமை (10.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான தெரிவு

### பேராசிரியர் வேல்நம்பி முன்னிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான திருநாவுக்கரசு வேல்நம்பி புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### ஒத்திவைக்கப்பட்ட

## உயர்தரப் பரீட்சை ஜனவரி 12 முதல் 20 வரை

(கொழும்பு)

ஒத்திவைக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் பெப்ரவரி 14 முதல் மார்ச் 02ஆம் திகதி வரை

15ஆம் பக்கம் பார்க்க

# பேரிடரிலிருந்து மீள போராடி வருகின்றோம்

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

டித்வா சூறாவளியால் நாட்டில் ஏற்பட்ட பேரிடரிலிருந்து மீண்டு வருவதற்குப் போராடி வருகின்றோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

### ஐரோப்பிய ஒன்றியம்

## 1.8 மில்லியன் யூரோ இலங்கைக்கு உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு அனர்த்த நிவாரண உதவியாக ஐரோப்பிய ஒன்றியம் 1.8 மில்லியன் யூரோ (சுமார் 70 கோடி ரூபாய்) அவசர மனிதாபிமான உதவியை

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.செம்மணியில்

## பேருந்திலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் பேருந்திலிருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அநுராதபுரத்

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மாவட்டத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

(மன்னார்)

பறங்கி ஆறு, பாலி ஆறுகளில் வெள்ள நீர் மட்டம் அதிகரிக்கவுள்ளதால் மன்னார் மாவட்டத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கையை அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விடுத்துள்ளது.

வடகிழக்கு பருவமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் பேராறு குளத்தின் பாதுகாப்புக் கருதி வான் கதவு ஒன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை (9) திறக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் மாவட்டத்தை மேற்கு பிரதேசத்தி

15ஆம் பக்கம் பார்க்க

### – தென்கிழக்கில் காற்றுச் சுழற்சி –

## வடக்கு உட்பட நாடு முழுவதும் மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தென்கிழக்கில் ஏற்பட்டுள்ள காற்றுச்சுழற்சி காரணமாக வடக்கு உட்பட நாடு முழுவதும் மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.


வானிலை தொடர்பாக நேற்றிரவு அவர் வெளியிட்ட அறிவிப்பில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்து வரும் பரவலான மழை எதிர்வரும் மூன்று தினங்களுக்கு குறிப்பாக எதிர்

04ஆம் பக்கம் பார்க்க

### ஜேர்மனியில்

## விபரீத முடிவெடுத்த யாழ்.இளைஞன் உயிரிழப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## 5 முதல் 10 வரையான தரங்களுக்கு பரீட்சை இல்லை

### கல்வி அமைச்சின் செயலாளர்

- இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீருடையைத் தவிர ஏனைய உடை அணிய அனுமதி.
- எதிர்வரும் 16ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பம்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ இவ்வாறு

04ஆம் பக்கம் பார்க்க

## பேரிடர் நிவாரணம் என மோசடியாளர்கள்

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

பேரிடர் நிவாரணம் வழங்குவதாக கூறும் மோசடிக்காரர்களிடம் இருந்து அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

டித்வா புயலால் பாதிக்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## சிற்றுண்டிச்சாலை கேள்வி மனு கோரல் - 2026

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி சிற்றுண்டிச்சாலை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு மாதாந்த வாடகை முறையில் நடத்திச் செல்வதற்கு. பொருத்தமான பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் வரவேற்கப்படுகின்றன. இடைநிலைப்பிரிவு, உயர்தரப்பிரிவு ஆகிய இரண்டு பகுதிகளிலும் தலா ஒரு சிற்றுண்டிச்சாலை வீதம் இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் அமைந்துள்ளன. கேள்வி கோரலின் போது தனித்தனியே இரண்டு சிற்றுண்டிச் சாலைக்கும் வெவ்வேறாக கேள்வி மனு சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி மனுகோரலின் போது ஒரு விண்ணப்பப்படிவத்துக்கான மீளளிக்கப்படாத செலுத்து தொகை ரூ.500 (அரசவரி உட்பட) பாடசாலைக் கடமை நாட்களில் அலுவலகத்தில் 10.12.2025 தொடக்கம் மு.ப 9.00 மணி பி.ப 1.00 மணி வரை உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று, 25.12.2025ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி என்னும் முகவரிக்கு சேர்த்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சிற்றுண்டிச்சாலையை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் 2026 எனக் குறிப்பிடல் வேண்டும்.

ஆரோக்கியமான உணவுக்கான உத்தரவாதத்துடன் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்த காரரிடமிருந்து கேள்வி கோரல் மனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திக் குழு,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(C-4538)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05.05.1955 மறைவு 08.12.2025

எமது பிரதேச செயலகத்தில் சிறுவர் பெண்கள் பிரிவில் உளவளத்துணை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி.**விஜயசங்கர் துர்க்கா** அவர்களின் அன்புத் தந்தையார்


அமரர் **கதிரித்தம்பி பரம்சோதி**
**(குருநாதர் வீதி, பொலிகண்டி)**

அவர்கள் 08.12.2025 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும்,**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(1789)

## மரண அறிவித்தல்



## சுப்பன் சுந்தரன்

முருகன் கோவிலடி புலோலி வடமேற்குப் புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் சுந்தரன் அவர்கள் நேற்று *(09.12.2025)* செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன் - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கார்த்தி மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் ஜெயராணி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற மயில்வாகனம், சிசிலியா மற்றும் ராசேந்திரன், செல்வராசா, ராசரத்தினம், சிவஞானம், றோஸ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராசா, ஜெயராசா மற்றும் செல்வநாயகம், செல்வராணி, வசந்தராணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஆனந்தராஜா மற்றும் யோகரஞ்சிதம் ஆகியோரின் சகலனும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சுதர்சனா (லண்டன்), சுகந்தன் (பிரான்ஸ்), சுரேன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஸ்ணவேணி (பிரான்ஸ்), மோகனதாஸ் (லண்டன்), பிரசாந்தி (இலங்கை), மயூரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அட்சயா, சுயித், சயன், பிரவீன், சுஜி, சுயானா, சுயான், சுகானி ஆகியோரின் பாசமிகு பேரனும் மதுசன், திபாகர், அருண், தர்மிஹா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :*
**குடும்பத்தினர்**

(1790)

## மரண அறிவித்தல்



## சின்னத்துரை நவரட்ணம் [துரை]

*யாழ்ப்பாணம் மூளாயைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கு மற்றும் கிளிநொச்சி கணேசபுரத்தை தற்போதைய வதி விடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரட்ணம்(துரை) அவர்கள் கடந்த 08.12.2025 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இலட்சுமியார் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான முருகானந்தவடிவேல், கமலா, கோபாலகிருஸ்ணன் மற்றும் கிருபானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மாதேவி அவர்களின் பாசமிகு கணவரும் காயத்திரி(லண்டன்), நிசாந்தன்(லண்டன்), கார்த்திகா(பிரான்ஸ்), கயல்விழி(லண்டன்), மோகனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தராசா, விவேதிகா, ரஜனிகாந்த், வசந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷா, நிதுஷா, ஆதிஸ், அஸ்விகா, ஆர்விகா, கன்சிகா, சயன், ஜசிகா, லதுஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் யோகேஸ்வரி, நவரட்ணராஜா (பத்மா ஏஜென்சி), புஸ்பராசவதி, அமுதசுரபி, மகேந்திரராசா (அதிபர் செல்வாநகர் வித்தியாலயம்), தவயோகராசா (ஜேர்மனி), ஜெகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 11.12.2025 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது வதிவிடமான இல.15/4, கணேசபுரம் கிளிநொச்சியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**077 354 9643**
**077 517 0577**

*தகவல் :*
**குடும்பத்தினர்**

(6111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'டித்வா' புயலின் கோரத்தாண்டவத்தால்

# 5,325 வீடுகள் முழுமையாக சேதம்

(கொழும்பு)

**டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்த நிலை காரணமாக இலங்கையில் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 5,000 ஐத் தாண்டிப் பதிவாகியுள்ளது.**

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, இதுவரை 5,325 வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சேதமடைந்த வீடுகளில் அதிகபட்ச எண்ணிக்கையாக 1,815 வீடுகள் கண்டி மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளன.


இது மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகக் கருதப்படுகிறது. அதைத் தொடர்ந்து, நுவரெலியா மாவட்டத்தில் 767 வீடுகளும், குருநாகல் மாவட்டத்தில் 476 வீடுகளும் முழுமையாகச்சேதமடைந்துள்ளன.

மேலும், புத்தளம் மாவட்டத்தில் 415 வீடுகளும், பதுளை மாவட்டத்தில் 404 வீடுகளும், அத்துடன் கேகாலை மாவட்டத்தில் 300 வீடுகளும் அனர்த்தத்தால் முழுமையாக நாசமடைந்துள்ளன.

முழுமையான சேதத்தைத் தவிர, டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

81,621 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஙி)

## அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த ஜனாதிபதி



(நுவரெலியா)

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் அமைந்துள்ள பராமரிப்பு நிலையத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அந்த மக்கள் தொடர்பான தகவல்களை கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, வெலிமடை - நுவரெலியா பிரதான வீதியில் ரேந்த பொல பகுதியில் மண்சரிவு ஏற்பட்ட இடத்திற்கு சென்று, அப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்கள் முகங் கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதன்போது இயல்பு நிலையை மீளக் கட்டியெழுப்புவதைத் துரிதப்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம் என ஜனாதிபதி தெரிவித்தார். (ஙி)

## 15 ஆயிரம் இடங்கள் ஆபத்தானதாக அடையாளம்

### தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

(நுவரெலியா)

சுமார் 15,000 அதிக மண்சரிவு அபாயமுள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அந்த இடங்களில் இருந்து சுமார் 5,000 குடும்பங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் நிச்சயமாக அந்தப் பகுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று நிறுவனத்தின் மூத்த புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர கூறினார்.

மண்சரிவு அபாயமுள்ள மாவட்டங்களில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான மையங்களுக்கு உடனடியாக அப்புறப்படுத்த தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இதற்கிடையில், நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு 4 மாவட்டங்களில் உள்ள 41 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வெளியிடப்பட்ட வெளியேற்ற சிவப்பு மண்சரிவு எச்சரிக்கைகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் என்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேநேரத்தில், 5 மாவட்டங்களில் உள்ள 31 பிரதேச செயலகப் பிரிவுகள் 2 ஆம் நிலை மண்சரிவு எச்சரிக்கையின் கீழ் ஆபத்தில் உள்ளன. (ஙி)

## டித்வா தாக்கத்தால் அதிகரிக்கும் இருதய நோய்

(கொழும்பு)

டித்வா சூறாவளியின் தாக்கம், தனிநபரின் மாரடைப்பு உள்ளிட்ட இருதய நோய்களை 40 சதவீதமாக அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

இதனைச் சர்வதேச ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளதாக, இருதய நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் கோத்தபாய ரணசிங்க தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், பேரிடரின் விளைவாக ஏற்படும் மன அழுத்தம், வீடுகளை இழத்தல் மற்றும் அன்பானவர்களை இழத்தல் போன்ற உளவியல் தாக்கங்கள், ஒரு சிலருக்கு நாளடைவில் இருதய நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உளவியல் அழுத்தம் இரத்த அழுத்தத்தை அதிகரித்து, இதயத் துடிப்பை வேகப்படுத்துவதாக கோத்தபாய ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், குருதியமுத்தம், நீரிழிவு, அதிக எடை உள்ளிட்ட நோய் நிலைமைகளால் அவதிப்படும் நாட்பட்ட நோயாளர்கள், மருந்துகளை உரியவாறு பெறவில்லை எனில், அது அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

மோசமான தூக்கம், பாதுகாப்பு முகாம்களில் தங்கியிருத்தல் மற்றும் பதற்றம் காரணமாகத் தூக்கமின்மை ஏற்படுவது, இருதயச் செயற்பாட்டைச் சீர்குலைப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களுக்குத் திரும்புவதும் இருதயநோய் அபாயத்தை அதிகரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ஙி)

## பண்டாரநாயக்க ஞாபகார்த்த நிதியம் 250 மில்லியன் ரூபாய் நிதியுதவி

(கொழும்பு)

அரசாங்கத்தின் நிவாரண நிதிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியம் 250 மில்லியன் ரூபாயை வழங்கியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட திடீர் அனர்த்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வில், புத்த சாசன, மத மற்றும் கலாசார



அலுவல்கள் அமைச்சர் ஹினிந்தும சுனில் செனவி மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஙி)

## அனர்த்தங்களின் போது 764 மதஸ்தலங்கள் சேதம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக விகாரைகள், ஆலயங்கள், பள்ளிவாசல்கள் உட்பட 764 மதத்தலங்கள் பகுதியளவும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

379 விகாரைகள், 165 கோவில்கள், 63 தேவாலயங்கள் மற்றும் 157 பள்ளி வாசல்கள் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பேரிடர் சூழ்நிலை காரணமாக பல மாவட்டங்களில் 18 கலாசார மையங்களும் சேதமடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அனைத்து மதத் தலங்களையும் மீட்டெடுத்து புனரமைக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் என்றும், இது பல கட்டங்களில் செய்யப்படும் என்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் ஏலப்பட்டியலில் 12 இலங்கை நட்சத்திரங்கள்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தால் வெளியிடப்பட்ட இறுதி வீரர்களின் பட்டியலின்படி, டிசம்பர் 16 ஆம் தேதி அபுதாபியில் நடைபெறவிருக்கும் இந்தியன் பிரீமியர் லீக் ஏலத்திற்கு 12 இலங்கை வீரர்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் வாரியம் நேற்று வெளியிட்ட 2026 இந்தியன் பிரீமியர் லீக் ஏலத்தின் வீரர்களின் இறுதிப் பட்டியலில் மொத்தம் 12 இலங்கை நட்சத்திரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

இந்தப் பட்டியலில் வனிந்து ஹசரங்க, மதீஷ பத்திரன மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்,

இவர்கள் அனைவரும் அதிக பட்ச அடிப்படை விலையான 2 கோடி இந்திய ரூபாவுக்கு இடம் பெற்றுள்ளனர்.

அனுபவம் வாய்ந்த சர்வதேச வீரர்களான பத்தும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ் மற்றும் முன்னாள் தலைவர் தசுன் ஷனக ஆகியோரும் ஏலத்தில் நுழைந்துள்ளனர்.


மேலும் வளர்ந்து வரும் வாய்ப்புகளான சரித் அசலங்க, துனித் வெல்லலகே மற்றும் விஜயகாந்த் வியாஸ்காந்த் ஆகியோரும் ஏலத்தின் பட்டியலில் உள்ளனர்.

குசல் பெரேரா, டிராவீன் மேத்யூ மற்றும் இடது கை வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ ஆகிய மூன்று மேலதிக வீரர்கள் இலங்கையின் பிரதிநிதித்துவத்தை நிறைவு செய்கிறார்கள்.

டிசம்பர் 16 செவ்வாய்க்கிழமை (இலங்கை நேரப்படி பிற்பகல் 2:30 மணிக்கு) ஏல நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

ஏலத்தின் போது பத்து அணிகளும் 77 இடங்களை நிரப்ப வேண்டும், அவற்றில் 31 இடங்கள் வெளிநாட்டு வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. (3)

# இந்திய அணிக்கு அபராதம் விதித்த ஐ.சி.சி!



இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் மற்றும் 3ஆவது போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்று தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ராய்ப்பூரில் நடைபெற்ற 2ஆவது போட்டியில் மட்டுமே தென் ஆபிரிக்கா வெற்றி பெற்றது.

ராய்ப்பூரில் நடைபெற்ற அந்த போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 358 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 359 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மெகா இலக்கை நோக்கி ஆடிய தென் ஆபிரிக்க அணி 49.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 362 ஓட்டங்கள் குவித்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் இந்திய அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீசி முடிக்கவில்லை. 2 ஓவர்கள் தாமதமாக வீசியது. இது ஐ.சி.சி. விதி 2.22இனை மீறிய குற்றமாகும்.

இதன் காரணமாக அந்த போட்டிக்கான இந்திய அணியில் இடம் பெற்றிருந்த வீரர்களுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து தலா 10 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (3)

# உலகக் கிண்ண கரம் போட்டியில் பதக்கங்களை அள்ளிய இலங்கை!



மாலைதீவுகளின் நசந்துரா ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற 7ஆவது கரம் உலகக் கிண்ணப் போட்டியில் ஆண்களுக்கான அணிநிலை பிரிவில் இலங்கை வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத்தது.

அதேவேளை பெண்களுக்கான அணிநிலைப் பிரிவில் இலங்கை வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்தது.

ஆண்களுக்கான அணிநிலை இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு பலத்த சவாலாக விளங்கிய மொஹமத் ஹில்மி தலைமையிலான இலங்கை அணி இறுதி செட்டில் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கத்துடன் திருப்தி அடைந்தது.

இரண்டு ஒற்றையர் ஆட்டங்கள், ஓர் இரட்டையர் ஆட்டத்தைக் கொண்ட இறுதிப் போட்டியில் ஒற்றையர் ஆட்டங்கள் நிறைவில் இந்தியாவை 1 - 1 என இலங்கை சமப்படுத்தியிருந்தது.

ஆனால் தீர்மானம் மிக்க இரட்டையர் போட்டியில் இந்தியாவிடம் இலங்கை தோல்வி அடைந்தது.

இதேவேளை, இலங்கை பெண்கள் அணியினால் வெண்கலப் பதக்கத்தையே வென்றெடுக்க முடிந்தது.

ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான 3ஆம் இடத்தைத் தீர்மானிக்கும் போட்டியில் இலங்கை கரம் வீராங்கனைகள் மிகத் திறமையாக விளையாடி வெற்றிபெற்று இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் கிடைக்கச் செய்தனர். (3)

## 5 முதல் ...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளிலுள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் அனைவரும் டிசம்பர் 15 ஆம் திகதி சேவைக்கு சமூகமளிக்க வேண்டும்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சீருடை விடயத்தில், தளர்வான கொள்கை பின்பற்றப்படும் என அவர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியிலுள்ள 10ஆயிரத்து 76 பாடசாலைகளில், 9 ஆயிரத்து 929 பாடசாலைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திறக்கப்படும்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு, உடனடியாகத் திறக்க முடியாத நிலையில் 147 பாடசாலைகள் உள்ளன.

அதற்கமைய மேல், வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் தென் ஆகிய மாகாண்ஙகளில் உள்ள பாடசாலைகளை எதிர்வரும் 16 ஆம் திகதி மீள ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊவா மாகாணத்தில் 26 பாடசாலைகளும் வடமேல் மாகாணத்தில் 6 பாடசாலைகளும் மத்திய மாகாணத்தில் 115 பாடசாலைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படாது எனவும் அறிவித்தார்.

மாகாண மட்டத்தில் பெறப்படும் இறுதி தகவல்களின் அடிப்படையில் இந்த எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து தொடர்ச்சியாக உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை 5 முதல் 10 வரையான தரங்களுக்கு இம்முறை மூன்றாம் தவணைக்கான பரீட்சை நடத்தப்படமாட்டாது எனவும் மாணவர்கள் அடுத்த தரங்களுக்கு வகுப்பேற்றப்படுவார்கள் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் 11 ஆம் தரத்துக்கு மாத்திரம் மாதிரி பரீட்சையொன்று நடத்தப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (ம-7)

## பேரிடரிலிருந்து...

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

டித்வா சூறாவளியிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவது தற்போது ஏனைய சவால்களை விட மிகப் பிரதானமாக உள்ளது. சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கை கடன் நெருக்கடி மற்றும் அரசியல் கொந்தளிப்பில் இருந்து மீளப் போராடி வருகின்றது.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக் கூடிய கடன்பட்ட நாடுகளுக்கு ஒரு புதிய அணுகுமுறையின் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

நமது நாடு இதுவரை சந்தித்த எந்தவொரு இயற்கைப் பேரழிவையும் விட சேதம் மிக அதிகமாக இருக்கலாம்.

எனவே காலநிலை பேரழிவுகளிலிருந்து நாம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் மற்றும் அதே நேரத்தில் நமது கடனைச் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, இதனால்தான் காலநிலை பாதிக்கப்படக்கூடிய நாடுகளுக்கான கடன் நிலைத்தன்மை, கட்டமைப்பு மாற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பேரிடர் சூழ்நிலையின் போது பல நாடுகளிலிருந்து கிடைத்த உதவிகளையும் ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடக்கு ...

வரும் 12.12.2025 வரை தொடரும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக இன்றும் (10) நாளையும் (11) நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் நிலப்பகுதிகள் அவற்றின் தரைக்கீழ் நீரை உறிஞ்சும் முழுக் கொள்ளளவை அடைந்துவிட்டன். குளங்கள் அவற்றின் முழுக்கொள்ளளவை எட்டியுள்ளன. சில பெரிய குளங்களின் மேலதிக நீர் வெளியேற்றத்துக்கான கதவுகள் நேற்றுப் பகல் திறக்கப்பட்டன (இரணைமடு).

இந்நிலையில் கிடைக்கும் மழை வீழ்ச்சி முழுவதும் தரை மேற்பரப்பில் தேங்குவதுடன் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தையும் உருவாக்கக்கூடும். எனவே வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களின் தாழ்நிலப்பகுதிகளிலுள்ள மக்கள் வெள்ள நிகழ்வுகள் தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரில் பெற்றோரை இழந்த சிறார்கள்; அரசு பொறுப்பேற்க நடவடிக்கை

(கொழும்பு)

பேரிடரால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த சிறார்கள் சமூக, நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் கீழ் பாதுகாக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் ஷானிக்கா மலல்கொட இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளைச் சேகரிக்கும் பணியை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

பிறப்பு 1974 . 11 . 06



இறப்பு 2025 . 12 . 08

## திருமதி. விவேகானந்தமூர்த்தி இராஜேஸ்வரி (பிள்ளை)

வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.விவேகானந்தமூர்த்தி இராஜேஸ்வரி அவர்கள் கடந்த 08.12.2025 திங்கட்கிழமையன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேஸ்வரன் (கணேசு)- லீலாவதி (மணி) தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-இராஜேஸ்வரி தம்பதியினரின் மருமகளும் விவேகானந்த மூர்த்தி (ஆனந்தன்) அவர்களின் அன்பு மனைவியும் அபிஷா, ஜீவிதா, கோபிகா (மாணவிகள் யா/இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் தவகேஸ்வரன், விக்கினேஸ்வரன் (விக்கினா-கனடா), சோதீஸ்வரன் (சோதி-கனடா), ஐங்கரன், பிரியா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரபாவதி, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் சிவறஞ்சினி (சிவா- கனடா), தவபாரதி, கஜனா, சாந்தா, சந்திரா, காலஞ்சென்றவர்களான மனோகரன், ஸ்ரீ ஆகியோரின் மைத்துனியும் கயூரன், டிலக்சனா, திபிஷா, விதுசனா, பானுஜன், விதுலா, மதுஷன், சசிவதனா, தனுஷன், தருமிலன், பவிசாலினி, ஆகியோரின் பாசமிகு அத்தையும் தவக்குமார், அனுஷா, செந்தில்குமார், வனஜா, பாலரூபன், லோகாஜினி, கமலராணி, சத்தியவதி, விஜியதர்சினி, ஜனனி, திருமுருகன், தெய்வீகன், குணாளினி, வாவுச்சி, லட்சுமி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.12.2025 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (1787)

வட்டுவினி,
இணுவில் மேற்கு. 077 453 3191, 074 317 4066
தகவல்
குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தல்

## திரவக் கழிவகற்றல், கட்டணக் கழிவகற்றல் சேவைகளுக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் -2026

1. யாழ் . மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் மக்களுக்கு இடையூறு இல்லாமல் உரிய வாகனத்தில் திரவக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்குக் கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு (01.01.2026 – 31.12.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் வாகனத்தில் மூடியமுறையில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு (01.01.2026 – 31.12.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் 10.12.2025 – 23.12.2025 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.00 மணி வரை இல 01, இல 02 ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,000.00+ வற்வரி 18% (ரூபா. 1,180.00) இனை பணமாகச் செலுத்தி பெறுகை முகாமைத்துவப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களை தொலைபேசி இல – 021 222 2275, மின்னஞ்சல் முகவரி – **mcjaffnamailv@yahoo.com** மூலம் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 23.12.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் / பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திரவக் கழிவகற்றல் / கட்டணக் கழிவகற்றல் சேவைக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2026" என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும். (01 ஆம், 02 ஆம் இலக்கமிடப்பட்ட சேவைகளுக்கு விண்ணப்பிக்கும்போது தங்களால் தெரிவு செய்யப்படும் சேவைக்கான விண்ணப்பங்களைத் தனித்தனியாக கடிதஉறைகளில் இட்டு விபரம் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்)

கேள்விகள் 23.12.2025 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**யாழ்ப்பாணம்.**

(C-4533)

# இராசிபலன்

10.12.2025
கார்த்திகை 24, புதன்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.04 மணி வரை

ஆயிலியம் முற்பகல் 8.39 மணிவரை
சுப நேரம் 4.49-6.19 மணிவரை
இராகுகாலம் 12.19-1.49 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தராடம்.

**வளவன்**




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.




பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினரிடையே சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.




அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச் சுமை கூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




தொழில் வளர்ச்சி கூடும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.




உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.


சுறுசுறுப்போடு இயங்கும் போது தான் மனிதன் வெற்றியடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தத்தால்
# 4 இலட்சம் கடலட்டைகள் இறப்பு
## கடற்றொழிலாளர்கள் கவலை

(தருமபுரம்) ......................................

**டித்வா புயல் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இரணைதீவு கடலட்டை பண்ணையாளர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



தற்போது ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக நான்கு இலட்சம் கடலட்டைகளும் இறந்துவிட்டன. இதன் பெறுமதி சுமார் 160 மில்லியன் ரூபா என தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, நான்கு படகுகள், எட்டு வள்ளங்கள், 10 மீனவ குடிசைகள், 200 அட்டைப் பண்ணை வலைகள், 450 நண்டு வலைகள், 150 பட்டிவலைக் கூட்டம் என்பனவும் அழிவடைந்துள்ளதாகவும் இரணைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இரணைத்தீவில் 103 கடலட்டைப் பண்ணையாளர்கள் 125 ஏக்கரில் கடலட்டை வளர்ப்பில் ஈடுப்பட்டிருந்தனர்.

இதில் நான்கு இலட்சம் கடலட்டைகள் காணப்பட்டன.

(8-316)

நாயாறு பகுதியில்

## பொது மக்கள் பாதுகாப்பாக செல்வதற்கு
# ஆறு படகுகள் சேவையில்

(முல்லைத்தீவு)

நாயாறு பகுதியில் பொது மக்கள் பாதுகாப்பாக செல்லும் வகையில் இலங்கை கடற்படையின் ஆதரவுடன் ஆறு படகுகள் தற்போது முழு நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஆறு படகுகளிலும் இரண்டு பயிற்சி பெற்ற உயிர்காக்கும் அதிகாரிகள் பணியில் உள்ளனர்.

பயணிகளுக்காக உயிர்க்காப்பு ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுவதுடன் தகவல் பரிமாற்றத்திற்காக தமிழ் பேசும் கடற்படை அதிகாரிகளும் உள்ளனர். அத்துடன் கடற்படை மகளிர் அதிகாரிகளும் சேவையில் உள்ளனர்.

மற்றும் அவசர தேவைகளுக்காகப் படகு சேவை 24 மணிநேரமும் செயற்படும்.

இரவு 7 மணிக்குப் பிறகும், ஒரு சிறப்புக் குழு மட்டும் அவசர சேவைக்காகத் தொடர்ந்து பணியில் இருக்கும்.

மேலும் 072 337 2886 என்ற கடற்படை அவசர எண்ணிற்கு அழைத்தால், தமிழ் பேசும் அதிகாரி பதிலளிப்பார் மற்றும் அவசர நிலையில் படகு சேவையை ஏற்பாடு செய்தும் தருவார்.

நோயாளிகளை அல்லது பிற அவசியமான இரவு நேர போக்குவரத்திற்காக 070 522 9463 என்ற எண்ணிற்கு அழைக்கலாம். பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பும் நம்பகத் தன்மையும் கருதி அதிகாரபூர்வ கடற்படை போக்குவரத்து சேவையை பயன்படுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## மறவன்புலவு மக்களுக்கு உதவி வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறவன்புலவு கிராமத்தில் தற்காலிக குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு நிலவிரிப்பு மற்றும் தறப்பாள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிராமத்தின் சமூகமட்ட அமைப்புக்களினுடைய கோரிக்கைக்கு அமைவாக கிராம அலுவலர் பவித்திரா நேரில் சென்று நிலைமைகளை அவதானித்து மேற்படி உதவித் திட்டங்களை வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# வவுனியாவில் 24 குளங்கள் புனரமைப்பு

(வவுனியா)

கடும்மழை மற்றும் புயல் காரணமாக வவுனியாவில் உடைப்பெடுத்த குளங்களில் 24 குளங்களினுடைய புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், 6 குளங்களினுடைய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 114 குளங்கள் உடைப்பெடுத்திருந்தன. உடைப்பெடுத்த குளங்களை புனரமைப்பதற்கான செயற்பாடுகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற் றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றின் ஊடாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இராணுவத்தினர், விமானப் படையினர் மற்றும் கமக்கார அமைப்பினரின் உதவியுடன் 24 குளங்கள் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், 6 குளங்களினுடைய புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஏனைய குளங்களையும் புனரமைப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (8-250)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக லண்டன் சிவன் ஆலயத்தினால் வழங்கப்பட்ட நிதியில் உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு சிவபூமி அறக்கட்டளை ஊடாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.



# அக்கராயன் குளத்தின் அணைக்கட்டில் உடைவு



(தருமபுரம்)

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட அக்கராஜன் குளத்தின் அணைக்கட்டில் உடைவு ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் விவசாயிகள் சேர்ந்து மண் மூட்டைகளைக் கொண்டு அணைக் கட்டைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில் எட்டு கமக்காரர் அமைப்பைச்சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் குறித்த அணைக்கட்டைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (8-318)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 700 | 500 | 500-800 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 250 | 190 |
| பச்சைமிளகாய் | 350 | 700 | 400 | 600-750 |
| தக்காளி | 300 | 400 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 150-200 | 250 | 150 | 120-150 |
| கோவா | 250 | 300 | 400 | 200 |
| கரட் | 250 | 400 | 400 | 400 |
| பூசணி | 140 | 150 | 150 | 100-120 |
| புடோல் | 400 | 300 | 400 | 400 |
| வாழைக்காய் | 80 | 100 | 150 | 30-50 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 300 | 400 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 220 | 250 | 300 | -- |
| பாகற்காய் | 1200 | 1600 | 2000 | 900-1000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 500 | 250-300 |
| கருணைக்கிழங்கு | 260 | 300 | 300 | 250 |
| பயற்றங்காய் | 1100 | 1000 | 1200 | 800-1300 |
| லீக்ஸ் | 300 | 350 | 400 | 450 |
| பீற்றூட் | 350 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 900 | 1000 | 1000 | 850 |
| முருங்கைக்காய் | -- | 2000 | 1600 | -- |
| போஞ்சி | 800 | 1000 | 1200 | 900 |
| கத்தரிதம்புள்ள | 400 | 600 | 400 | -- |
| கீரை - 1 பிடி | 80-140 | 200 | 200 | 150 |
| தேசிக்காய் | 700 | 400 | 400 | 300-500 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 120-160 | 70-150 |
| இராசவள்ளி | 900 | 600 | 650 | 400 |
| வெங்காயப்பூ | 800 | 1000 | 800 | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 400 | 70 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 80 | -- |
| வல்லாரை | 80 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 100-160 | 100 | 150 | 80-100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபோதையில் சாரத்தியம் 15 சாரதிகள் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதி யில் நேற்று முன்தி னம் திங்கட்கிழமை மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மது போதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர் பில் 15 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செய ல்கள் தொடர்பில் ஆதா ரங்களுடன் 10 பேரும், சந்தேகத்தின் பேரில் 594 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 223 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 128 பேரும், கவனக் குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 14 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதி முறைகளை மீறியமை தொடர்பில் 3582 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# கலைமலர் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து மலரை வெளியிட்டு வைப்பார். மலர் ஆசிரியர் விரிவுரையாளர் வே. சேந்தன்மலர் பற்றிய அறிமுகவுரையை ஆற்றுவார். கலாசாலையின் 102 வருட வரலாற்றில் வெளிவரும் 49 ஆவது மலர் இது எனத் தெரிவிக்கப்பட்டது. (3-33)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய அரிசி மீது புதிய வரிகளை விதிக்க ட்ரம்ப் பரிசீலனை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் திங்களன்று தனது நிர்வாகம் விவசாய இறக்குமதிகள் மீது, குறிப்பாக இந்திய அரிசி மற்றும் கனடாவிலிருந்து பெறப்படும் உரங்கள் மீது புதிய வரிகளை அறிமுகப்படுத்தக்கூடும் என்று சமிக்ஞை செய்தார்.

வெள்ளை மாளிகையில் நடந்த ஒரு கூட்டத்தின்போது அவரது கருத்துக்கள் வந்தன, அங்கு பெருகிவரும் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ளும் அமெரிக்க விவசாயிகளுக்கு 12 பில்லியன் அமெரிக்க டொலர் ஆதரவு தொகுப்பையும் அவர் அறிவித்தார்.

இந்தியா மற்றும் கனடா ஆகிய இரு நாடுகளுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் எந்த அர்த்தமுள்ள முன்னேற்றமும் இல்லாமல் தொடர்வதால், ட்ரம்ப் நிர்வாகத்திற்குள் வளர்ந்து வரும் விரக்தியை இந்தக் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

அதிகரித்து வரும் போட்டியிலிருந்து அமெரிக்க உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க இப்போது கடுமையான நடவடிக்கைகள் தேவைப்படலாம் என்றும் ட்ரம்ப் பரிந்துரைத்தார்.

இந்தியா மற்றும் கனடாவுடனான அமெரிக்க வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் பெரிய முன்னேற்றங்களை அடைய சிரமப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், புதுடில்லியின் வர்த்தகத் தடைகள் மற்றும் பிற விநியோகஸ்தர்களிடமிருந்து அதன் எரிசக்தி இறக்குமதியை விமர்சித்து, அமெரிக்கா பல இந்தியப் பொருட்களுக்கு 50% வரிகளை விதித்தது.

இந்த வாரம் ஒரு அமெரிக்கக் குழு இந்தியாவுக்கு வருகை தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் அதிகாரிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எதிர்பார்க்கவில்லை.

கனடாவுடனான உறவுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

வட அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் எல்லைக்கு வெளியே உள்ள பொருட்களுக்கு அதிக வரிகளை விதிக்கப் போவதாக ட்ரம்ப் முன்னர் அச்சுறுத்தியுள்ளார்.

மேலும் இந்த ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்படலாம் என்றும் கூட சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## உக்ரை... ஐரோ...



உக்ரைன் மற்றும் அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையே கடந்த வாரம் வரைவு செய்யப்பட்ட அமைதித்

## வடக்கு ஜப்பானை தாக்கியது நிலநடுக்கம்

### 30 பேர் காயம்

(டோக்கியோ)

வடக்கு ஜப்பானில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7.5 ரிச்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கி 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தை தொடர்ந்து ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு பின்னர் மீளப் பெறப்பட்டன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு ஜப்பானின் வடகிழக்கு கடற்கரையில் நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து 10 அடி உயரத்திற்கு இராட்சத சுனாமி அலைகள் எழலாம் என ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் அறிவித்தது.

அதன்படி, ஹொக்கைடோ, அமோரி மற்றும் இவாட் மாகாணங்களுக்கு சுனாமி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. மேலும் பல துறைமுகங்களில் 20 முதல் 70 செ.மீ (7 முதல் 27 அங்குலம்) உயரத்தில் சுனாமி அலைகள் தாக்கின.

நிலநடுக்கத்தின் மையம் அமோரி மாகாணத்தின் கடற்கரையிலிருந்து 80 கிலோ மீற்றர் (50 மைல்) தொலைவில், 50 கிலோ மீற்றர் (30 மைல்) ஆழத்தில் பதிவாகியது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும், அதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் தீயணைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

உடைந்து விழுந்த பொருட்களாலே பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 2,700 வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சுமார் 480 குடியிருப்பாளர்கள் ஹச்சினோஹே விமான நிலையத்தில் தஞ்சம் அடைந்ததாக தலைமை அமைச்சரவைச் செயலாளர் மினோரு கிஹாரா தெரிவித்துள்ளார். (நி)



## மோடி உ... உலகத் தலை...

### நல்லுறவு உள்...

(ஜெருசலேம்)

பிரதமர் மோடி உட்பட உலகத் தலைவர்களுடன் தனக்கு நல்ல உறவு இருக்கிறது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பாராளுமன்றில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பேசியதாவது: யூத எதிர்ப்பு அலை இருந்தபோதிலும், பல நாடுகள் மற்றும் தலைவர்களிடமிருந்து முன் எப்போதும் இல்லாத ஆதரவு நமக்கு கிடைக்கிறது. பிரதமர் மோடி உட்பட உலகத் தலைவர்களுடன் எனக்கு நல்ல உறவு இருக்கிறது. இஸ்ரேல் இன்று எப்போதையும் விட வலிமையானது.

பல உலகத் தலைவர்கள் எங்களைத் தேடி வருகின்றனர். நமது மகத்தான சாதனைகளைப் பார்க்க வேண்டும். இரண்டு ஆண்டுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

# ரனுக்கான ஆதரவை அதிகரிக்க ாப்பிய தலைவர்கள் முடிவு!



**உக்ரைனுக்கான ஆதரவை அதிகரிக்கவும், போரை முடிவுக்குக் கொண்டு வர ரஷ்யா மீது அழுத்தம் கொடுக்கவும் "இப்போது ஒரு முக்கியமான தருணம்" என்று ஐரோப்பியத் தலைவர்கள் தெரிவித்தனர்.**

★ ★ ★

திட்டத்தின் அண்மைய பாதிப்பு குறித்து விவாதிக்க உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் ஜேர்மன் சான்சலர் பிரீட்ரிக் மெர்ஸ் ஆகியோரை நேற்று முன்தினம் திங்களன்று லண்டனில் சந்தித்தார்.

ரஷ்யாவுடன் விரைவான ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ள அமெரிக்கா கீவ் மீது அழுத்தம் கொடுப்பதால், உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களைப் பெறுவதற்கு மேலதிக பணிகள் தேவை என்று ஐரோப்பியத் தலைவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

நேட்டோ அதிகாரிகளைச் சந்திக்க பிரஸ்ஸல்ஸுக்குச் சென்ற ஜெலென்ஸ்கி, நேற்று செவ்வாயன்று உக்ரைன் அமெரிக்காவுடன் திருத்தப்பட்ட திட்டத்தைப் பகிர்ந்து கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

கடந்த வாரம், உக்ரைனிய அதிகாரிகள் புளோரிடாவில் அமெரிக்க பேச்சுவார்த்தை குழுவுடன் மூன்று நாட்கள் செலவிட்டு, ரஷ்யாவிற்கு சாதகமாகக் கருதப்படும் அமெரிக்க ஆதரவுடன் கூடிய சமாதானத் திட்டத்தில் மாற்றங்களைக் கோரினர். (நி)

## உள்ளிட்ட லவர்களுடன் உள்ளது

### இஸ்ரேல் பிரதமர்

போரில் ஈடுபட்ட போதிலும் இஸ்ரேல் இராஜதந்திர ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. 'நான் எனது பழைய நண்பரான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் அடிக்கடி பேசுகிறேன். விரைவில் சந்திக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். அதிக மக்கள் தொகையை கொண்ட ஒரு பெரிய நாடு இந்தியா எங்களுடன் உறவை வலுப்படுத்த விரும்புகிறது. இஸ்ரேலுக்கு அமெரிக்காவை விட சிறந்த நட்பு நாடு இல்லை. அமெரிக்காவிற்கு இஸ்ரேலை விட சிறந்த நட்பு நாடு இல்லை. உலகம் முழுவதும் யூத விரோதத்தை நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம். இவ்வாறு பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார். (நி)

## பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினால்
# கடும் பதிலடி கொடுப்போம்

### இந்தியாவுக்கு பாகிஸ்தான் தளபதி எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஒரு அமைதியான நாடு எதிர்காலத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் பாகிஸ்தான் இன்னும் விரைவான, கடுமையான மற்றும் தீவிரமான பதிலடி கொடுக்கும் என பாகிஸ்தான் முப்படைகளின் தளபதி பீல்டு மார்ஷ் அசிம் முனீர் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பாகிஸ்தானில் முப்படைகளின் தலைவர் பதவியை அந்நாட்டு அரசாங்கம் புதிதாக உருவாக்கியது. இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பாகிஸ்தான் பின்நிலை சந்தித்ததால் இந்தப் பதவியை உருவாக்கியது.

அதன்படி முப்படைகளின் தலைவராக இராணுவ தளபதியாக இருந்த பீல்டு மார்ஷ் அசிம் முனீர் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் முப்படைகளின் தலைவராக பதவியேற்ற பிறகு அசிம் முனீர் இஸ்லாமாபாத்தில் உள்ள இராணுவ தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியதாவது:-

வளர்ந்து வரும் மற்றும் மாறிவரும் அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு, முப்படைகள் ஒருங்கிணைந்த அமைப்பின் கீழ் அதன் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவது அவசியம்.

எதிர்காலத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டால் பாகிஸ்தான் இன்னும் விரைவான, கடுமையான மற்றும் தீவிரமான பதிலடி கொடுக்கும். இதனால் இந்தியா எந்த மாயையிலும் இருக்கக் கூடாது.

எந்தவொரு சுய- ஏமாற்றம் அல்லது அனுமானத் திற்கும் இந்தியா பலியாகக் கூடாது. பாகிஸ்தான் ஒரு அமைதியான நாடு. ஆனால் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது இறையாண்மையை யாரும் சோதிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார். மேலும் அவர் ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களுக்கும் எச்சரிக்கை விடுத்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்

## கடின உழைப்பால் முன்னேறும் கும்ப இராசியினரே!



**கிரகநிலை** - ராசியில் சனி, ராகு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு (வ) - களத்திர ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் புதன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** கடின உழைப்பும் முயற்சிகளில் வெற்றி பெறும் திறனும் உடைய கும்ப இராசியினரே! இந்த மாதம் பணம் வரும் வாய்ப்பு உள்ளது. எதிர்த்து செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார்கள். நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். ராசிநாதன் சனி சஞ்சாரம் பல விதத்திலும் நன்மை செய்யும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். புத்தி கூர்மையுடன் செயற்படுவீர்கள். தைரியம் உண்டாகும். வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண்டாகும்.

தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும், புதிய ஓர்டர்கள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். தொழில் தொடர்பாக அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். உத்தியோக மாற்றம் ஏற்படலாம்.

குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம் கவனம் தேவை. குடும்ப செலவுகள் அதிகரிக்கும். ஆயுதங்கள், நெருப்புகள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. பூர்வீக சொத்துக்கள் மூலம் வர வேண்டியவை தாமதப்படும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

**பெண்கள்** - மற்றவர்கள் நலனை அக்கறையுடன் கவனிப்பீர்கள். செலவுகள் அதிகரிக்கும். வீண் அலைச்சல் உண்டாகும். கவனம் தேவை.

**கலைத்துறையினர்** - பணிகளில் கவலைகள் இருந்தாலும் நிறைவாக முடியும். எந்த ஒரு செயலையும் யோசித்துச் செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவதும் நன்மை தரும்.

**அரசியல் துறையினர்** - தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது. மனோதிடம் உண்டாகும். கடன்கள், நோய்கள் தீரும். விவாதம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை




இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள்.

**மாணவர்கள்** - பாடங்களை படிப்பதற்கு கூடுதல் நேரம் ஒதுக்குவது நல்லது. புத்திகூர்மையுடன் செயல்படுவது எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவும்.

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் புதிய மாற்றம் உருவாகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். வாகனங்களைப் பிரயோகப்படுத்தும் போது மிகவும் கவனம் தேவை. செய்யும் உத்தியோகத்தில் இட மாற்றமோ அல்லது பணி நிரந்தரமோ ஏற்படலாம்.

**சதயம்:** இந்த மாதம் பணப் புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு மரியாதை சிறப்படையும். செல்வாக்கு ஓங்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தம்பதிகளிடையே அன்பு மேலோங்கும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும்.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் பொதுவாக நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். எதிலும் சிறிதளவு ஆதாயம் ஏற்படும். முன்விரோதம் காரணமாக சில சங்கடங்கள் உருவாகலாம், என்றாலும் அவற்றை சமாளிக்கும் வழிகள் உங்களுக்கு புலப்படும். இயந்திரங்களைப் பிரயோகிக்கும் பணியாளர்கள் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்.

**பரிகாரம்:** வியாழக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு வெண்ணை சாற்றி வழிபடுவது மனோபலத்தை அதிகரிக்கச் செய்யும். எதிர்ப்புகள் அகலும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14
**அதிஷ்ட தினங்கள்:** 6, 7

## எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடும் மீன இராசியினரே!



**கிரகநிலை** - ராசியில் சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் குரு (வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் புதன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி, ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எச்சரிக்கையுடன் எதிலும் ஈடுபடும் மீன இராசியினரே! நீங்கள் அவசரமாக எதையும் செய்யத் தயங்காத குணமும் உடையவர்கள். இந்த மாதம் பண வரத்து கூடும். உடல் சோர்வு உண்டாகலாம். வீண் கவலை, வீண் வாக்கு வாதங்கள் ஆகியவை ஏற்படும். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். தொழில், வியாபாரம், இலாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமான பலனைத் தரும்.

பயணம் மூலம் வியாபாரம், தொழில் என்பன விரிவாக்கம் பெறும். பழைய பாக்கிகள் வசூலாகும். நிதி நிலைமை உயரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பார்கள். கஷ்டமில்லாத வாழ்க்கை உண்டாகும். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண முயற்சியில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்தினர்கள் வருகை இருக்கும். கணவன், மனைவிக்கு இடையே ஒற்றுமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இருக்கும். சுதந்திரமான எண்ணம் ஏற்படும்.

**பெண்கள்** - நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து கூடும்.

**கலைத்துறையினர்** - நட்பு வகையில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. சிலநேரத்தில் விபரீதமான எண்ணம் தோன்றலாம் கவனம் தேவை. பணிகள் தொடர்பான விடயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்சினைகள் குறையும்.

**அரசியல் துறையினர்** - எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எடுத்த வேலைகளில் மிகவும் கவனமுடன் செயற்படுவது நல்லது.




மன வலிமை அதிகரிக்கும். மக்கள் மத்தியில் மதிப்பு கூடும்.

**மாணவர்கள்** - கல்வியில் வெற்றி உண்டாகும். கடினமான வேலைகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். விளையாட்டுகளில் ஆர்வம் உண்டாகும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:** இந்த மாதம் தொழிலில் சிக்கல்கள் உருவாகாது என்றாலும் சிற்சில வாக்கு வாதங்கள் இருக்கும். எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் தொல்லைகள் இராது. அடுத்தவர்களுடைய விவகாரங்களில் வீணாக தலையிட வேண்டாம். பகைவர்கள் பணிந்து போகவும் வாய்ப்புகள் உண்டு.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் விடாப்பிடியாக செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வரும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்சினைகள் வரக்கூடும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**ரேவதி:** இந்த மாதம் பொதுவாக அன்றாடப் பணிகளை கவனித்துக் கொண்டு மிகவும் நிதானமாக இருக்க வேண்டும். பெரியோர் சொல்படி நடந்து கொண்டால் தொல்லைகளைத் தவிர்க்கலாம். பலவிதமான சூழ்நிலைகளில் உங்களுடைய சாதுரியத்தால் சமாளிப்பீர்கள்.


**பரிகாரம்:** செவ்வாய்கிழமை தோறும் முருகனை வணங்கி வழிபட எல்லா நன்மைகளும் உண்டாகும். பணவரத்து கூடும். கடன் பிரச்சினை தீரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 15, 16, 17
**அதிஷ்ட தினங்கள்:** 8, 9

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பிரேமதாச - ரஷ்யத் தூதுவர் சந்திப்பு!



(கொழும்பு)

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ்.தாகரியனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ரஷ்ய தூதுவருக்கு விளக்கமளித்து, மக்களின் வாழ்க்கையை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கும், சேதமடைந்து போன ரயில் போக்குவரத்துப் பாதைகள், வீதிக் கட்டமைப்புகளைச் சீரமைப்பதற்கும், சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீள புனர்நிர்மாணம் செய்வதற்கும் தேவையான ஆதரவுகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தார்.

அவ்வாறே, இந்த இக்கட்டான நேரத்தில், இதுவரைக்கும் ரஷ்ய அரசு நல்கிய ஆதரவிற்காக எதிர்க்கட்சித் தலைவர், முழு இலங்கை மக்களின் சார்பாகத் தமது நன்றிகளை ரஷ்யத் தூதுவரிடம் தெரிவித்துக் கொண்டார். நீண்டகால நண்பர்களாக இரு நாடுகளுக்கும் இடையே காணப்பட்டு வரும் வர்த்தக ஒத்துழைப்புகளை மேலும் மேம்படுத்தத் தேவையான ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருமாறும், வீழ்ந்து கிடக் கும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இது பெரும் உறுதுணையாக அமையும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (ஙி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1இல் செவ்<br>கி-பா-56 1/4<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSC,MSC, Engineer(Singapore)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/ 16293 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA,pvt<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச தொழில், விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14366 |
| பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்:அனுசம் 1 இல் செவ்<br>கி-பா:73<br>உயரம்: 6"<br>தகைமை/ தொழில்: MBBS, Doctor (America)<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/ 16294 | பிறப்பு: 1996-இந்து<br>நட்சத்திரம்:சதயம் 7இல் சூரி செவ்<br>கி-பா: 95<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MLT<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/15462 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்-A/L, கமம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/ 16295 | பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 06<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc,MSc, Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15463 |
| பிறப்பு:, 1987- இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி-பா-28 2 இல் சூரிசெவ்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்-BSc,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/ 16296 | பிறப்பு: 1998-இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 8 இல் செவ்<br>கி.பா- 94<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -BSc, Senior Opreation Analyst<br>எதிர்பார்ப்பு: Only London(PR)<br>தொ.இ: G/ 15466 |
| பிறப்பு: 1994- இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி-பா-16<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/ 16298 | பிறப்பு:1984 - இந்து<br>நட்சத்திரம்-அச்சுவினி<br>கிபா: 71<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, DO<br>எதிர்பார்ப்பு - Degree and Employee<br>தொ.இ: G/16189 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 371



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மரமும் சிகிச்சையும்!

"சேர்! எங்க வீட்டுக் கொல்லைப் புறத்தில் இருக்கிற ஒரு மரத்துக்கு உடம்பு சரியில்லை. அநேகமாக அந்த மரத்துக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். நீங்க கொஞ்சம் வந்து பார்த்தால் நல்லது."

இப்படி யாராவது உங்களிடம் வந்து சொன்னால் நீங்க என்ன நினைப்பீர்கள்.

சொல்கிறவரை ஒரு மாதிரியாகப் பார்ப்பீர்கள்.

ஜப்பானில் இப்படி யாராவது சொன்னால் அங்கே இது ஆச்சரிய மான விடயம் இல்லை!

ஏன் என்றால் அங்கே மரங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யும் வைத்தியர் ஒருத்தர் இருக்கிறார்.

அவர் பெயர் தடாஹிகோ யாமானோ!

அவருக்கு இப்போ 90 வயசு ஆகுதாம். அங்கே எல்லோரும் அவரை "மர வைத்தியர்" என்றே சொல்லுவார்களாம்! அதாவது மரத்துக்கு வைத்தியம் செய்யும் வைத்தியர்.

இனிமேல் பிழைக்காது பட்டுப்போய்விடும்.. என்னும் நிலைமையிலே உள்ள மரங்களையெல்லாம் அவர் பிழைக்க வைத்து விடுவாராம்! பத்து, பயிற்சி வைத்தியர்கள் வேறு அவருக்குத் துணையாக இருக்கிறார்களாம். இதுவரைக்கும் 1000 மரங்களுக்கு மேல் அவர் காப்பாற்றியிருக்கிறாராம்!

மரங்களுக்கு சிகிச்சை கொடுப்பதற்கு அவர் சில விசேட வைத்திய முறைகளை யெல்லாம் உருவாக்கியிருக்கிறாராம்.

நாமெல்லாம் வைத்தியரிடம் போனால் உடனே நமது கையைப் பிடித்துப் பார்த்து அவர் -நாடி பார்த்து... "என்ன கோளாறு" என்று கண்டு பிடிக்கிறார்கள். அதுமாதிரி அவர் என்ன செய்வார் என்றால் ஆரம்பத்திலே உள்ளங்கையை வைத்துப் பார்த்து அந்த மரத்திலே என்ன கோளாறு என்பதைக் கண்டு பிடிப்பாராம்! அவ்வளவு அனுபவம்!

"ஒரு மரத்துக்கு வைத்தியம் பார்க்க வேண்டும் வாங்க... என்று அவரை கூப்பிட்டால்.. உடனே அதுக்கான கருவிகள், மருந்துகள் எல்லாத்தையும் தயார் செய்து கொண்டு உதவியாளர்களையும் கூப்பிட்டுக்கொண்டு வண்டியிலே கிளம்பி வந்துவிடுவாராம்!

அவர் வைத்தியம் செய்வது எப்படித் தெரியுமா?

முதலிலே மரத்து மேல் 15 மீற்றர் உயரத்துக்கு உருக்குக் குழாய்களைக் கொண்டு சாரம் கட்டிக் கொள்கிறார்.

அதுக்கு பின்பு மரத்திலே உளுத்துப்போன பகுதிகளை வெட்டி எடுக்கிறார்.. அல்லது சுரண்டி எடுக்கிறார்...

பின்பு அந்த இடத்திலே இவர், தான் சொந்தமாகத் தயார் செய்த விசேட மருந்து கலந்த ஒருவகை பசையைப் பூசுகிறார். பிசின் மாதிரி அது!

பாதிக்கப்பட்ட பகுதியிலே ஈரம் படாமல் பார்த்துக் கொள்கிறது அது! அடி மரத்தின் உட்பகுதியிலே மரம் உளுத்து ஒன்றுமில்லாமல் போயிருந்தால்... அந்த இடங்கள் மேலே வெளிப்புறத்துலே கம்பி வலையை சுற்றுகிறார். அதன்மேல் ஒரு கலவையைப் பூசுகிறார். அவ்வளவுதான்.

கொஞ்ச நாளிலே மரத்துக்குப் புத்துயிர் கிடைக்குது!

மரங்களில் எல்லாம் லேசிலே மடியாது என்கிறார் அந்தப் பெரியவர். அவர்என்ன சொல்கிறார் தெரியுமா?

"ஒரு மரம் தற்கொலை செய்து கொண்டது என்று கேள்விப் பட்டிருக்கீங்களா? அப்படி ஆகாது. சரியான சமயத்தில் நாம் கொஞ்சம் கவனித்து உதவி செய்தால் போதும் அதுக்கப்புறம் அது சொந்த பலத்திலே பிழைத்துக் கொள்ளும்" என்கிறார்.

"இனி இந்த மரம் பிழைக்காது என்று நீங்களாக முடிவு செய்து கொண்டு மரத்தை வெட்டி விடாதீர்கள்! மரங்களை வெட்டவே கூடாது!" என்று கண்டிப்போட சொல்கிறார் அவர்.முன்பெல்லாம் அவரே மரத்தின் மேல் கிடுகிடு என்று ஏறி வைத்தியம் செய்ய ஆரம்பித்துவிடுவாராம்.

இப்போது அவருக்கு வயதாகிவிட்டதினாலே அவருடைய உதவி யாளர்கள் அவரை மரத்தின்மேலே போக விடுவதில்லை! அதனாலே அவர்இப்ப என்ன செய்கிறார் என்றால்.. கீழேயே நின்றுகொண்டு "பைனாகுலர்ஸ்" மூலமாக மேலே பார்க்கிறார். இங்கே இருந்து கொண்டே "அட்வைஸ்" கொடுக்கிறார். அவருடைய உதவியாளர்கள், மேலே போய் வைத்தியம் பார்க்கிறார்கள்!

வருங்காலத்திலே மரத்துக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்கள் இன்னும் அதிகமாகஆனாலும் ஆகலாம். அதைப்பற்றி ஒரு கற்பனை. இன்னும் ஒரு நூறு வருடம் கழித்து இது நடக்கிறதா வைத்துக் கொள்ளுங்கள். ஒருத்தர் வேகமா ஓடி வருகிறார். ஒரு மர டாக்டரிடம்.

"டாக்டர்... எங்களின் தோப்பில் இருக்கிற ஒரு மரத்துக்கு உடம்பு சரியில்லை. உடனே நீங்க வந்து பார்க்க வேண்டும்!" என்கிறார்.

டாக்டர் மெதுவாக தலை நிமிர்ந்து அவரைப் பார்த்து

"என்ன மரம் அது?" என்கிறார்.

"பூவரசு மரம்!" என்கிறார் வந்தவர். உடனே அவர்.

"சாரி! அதுக்கான டாக்டர் அடுத்த கட்டடத்திலே இருக்கிறார்..! நான் புளிய மரத்துக்கான டாக்டர்!" அப்படி என்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 929





"சக்கரவர்த்தி! நான் விரும்புவதும் அதுதான். நந்தினி தேவியின் கோபத்தைத் தணிப்பதற்கு இன்னும் முக்கியமான காரணங்களும் இருக்கின்றன. நந்தினி வந்து சேரும் வரையில் ஈழத்து அரசி நமது அரண்மனையில் இருப்பதற்கு அனுமதி தரவேண்டும்"

"ஆகா அவளை ஈழத்து அரசியாக முடிசூட்டிவிட்டீர்கள் அல்லவா? போகட்டும் அவளுக்கும் பழுவூர் ராணிக்கும் என்ன சம்பந்தம்?"

"அதைத்தான் கண்டு பிடிக்க வேண்டும், பிரபு! இருவரும் நேருக்கு நேர் சந்தித்தால் ஒருவேளை அந்தச் சம்பந்தம் தெரியவரலாம். நந்தினிதேவி சோழ குலத்தின் மீது கொண்டிருக்கும் பகையும் ஒருவேளை மாறலாம்"

"மந்திரி! ஒரு பெண்ணின் பகையைக் குறித்து நீங்கள் இவ்வளவு கவலைப்படுவது ஆச்சரியமாயிருக்கிறது"

"நந்தினி தேவியின் பகையைக் குறித்து கவலைப்படக் காரணம் இருக்கிறது. அதை நான் சொல்வது உசிதமாயிருக்குமா என்று அஞ்சுகிறேன்.."

"தாங்கள் சொல்லத் தயங்குவதை வேறு யார் என்னிடம் சொல்ல முடியும்? மிச்சம் வைக்காமல் சொல்லிவிடுங்கள்" என்றார் சக்கரவர்த்தி.

முதன்மந்திரி சிறிது யோசனை செய்துவிட்டுக் கூறினார். "மன்னர் பெருமானே! இப்போது நான் கூறப்போவது மிகச் சிக்கலான விடயம். தங்களுக்கு அது உகந்ததாயிருக்க முடியாது. ஆயினும் பொறுமையுடன் கேட்க வேண்டும். நந்தினி தேவியையும், மந்தாகினி தேவியையும் பார்த்தவர்கள் அனைவரும் அவர்களுடைய தோற்றத்தின் ஒற்றுமையைக் குறித்து அதிசயிக்கிறார் கள்"

"உலகத்தில் இப்படி எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. ஒரு மரத்தைப் போலவே இன்னொரு மரம் இருக்கிறது. ஒரு பைத்தியம் போல் இன்னொரு பைத்தியம் இருக்கிறது"

"ஆனால் ஒரு மரம் இன்னொரு மரத்தைப்போல் வேடம் போட்டு நடப்பதில்லை. ஒரு பைத்தியம் இன்னொரு பைத்தியத்தின் ஆவியைப் போல் வந்து சக்கரவர்த்தியை இம்சிப்பதில்லை.."

"என்ன சொல்கிறீர், முதன் மந்திரி?"

"மந்தாகினி தேவியின் ஆவி தங்களை இரவு நேரங்களில் வந்து இம்சிப்பதாக எண்ணித் தாங்கள் வேதனைப்பட்டு வந்தீர்கள்"

அவளுடைய ஆவி வரவில்லை, அவளே வந்தாள் என்று சொல்கிறீரா?"

"இல்லை, இல்லை பழுவூர் இளைய ராணி, மந்தாகினியின் ஆவியாக நடித்துத் தங்களை இம்சித்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன்."


சுந்தர சோழர் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கோபவெறி பொங்க, "நீங்கள் இப்போது சொல்வது மட்டும் உண்மை என்று ஏற்பட்டால், அந்த ராட்சஸியை என் கையினாலேயே கழுத்தை நெரித்து" என்று கூறுவதற்குள், முதன்மந்திரி குறுக்கிட்டு, "வேண்டாம், சக்கரவர்த்தி!

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## உயிர் இனங்களுக்குள் உதவி



ஒரு காட்டில், புறாக்களைப் பிடிப்பதற்காக ஒரு வேடன் வலை விரித்து இருந்தான், அதில் தானியங்களையும் தூவி இருந்தான். அதைக் கண்ட புறாக்கூட்டம் வளையுடன் இருந்த தானியங்களை உண்ட பிறகு, பறக்க முயன்ற போது, வலையில் மாட்டிக் கொண்டன. புறாக்கள் எல்லாம் ஒருமிக்க முயன்று, அலகால் கவ்வியபடி, வலையோடு பறந்து சென்று, சிறிது தொலைவில் இறங்கின. அந்தப் புறாக்களுக்கு எல்லாம் பெரிய புறா ஒன்று, தனக்குப் பழக்கமுள்ள ஒரு எலியிடம் வலையோடு சென்று, நிலைமையைக் கூறியது. அந்த எலி தன் பற்களால் வலையைக் கடித்துப் புறாக்களை விடுவித்தது. புறாக்கள் மகிழ்ச்சியுடன் பறந்து சென்றன.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு காக்கையானது, தனக்கு ஒரு நட்பு இருந்தால், ஆபத்து வேளையில் உதவியாக இருக்குமே என்று கருதியது.

எலியிடம் சென்று நாம் இருவரும் நட்பாக இருப்போம் என்றது காக்கை எலி அதை நம்பவில்லை, "என்னைக் கொத்தி தின்பதற்காகவே, என் நட்பை நீ விரும்புகிறாய்" என்று கூறி, புதருக்குள் ஓடியது.

காக்கை பலவாறு எடுத்துக் கூறியது. பிறகு எலியும், காக்கையும் நட்புக் கொண்டன.

ஒரு நாள் காக்கை, 'எலியே! சிறிது தொலைவில் உள்ள நதியில் எனக்கு நட்பான ஆமை ஒன்று உள்ளது, அங்கே சென்றால், இரை நிறையக் கிடைக்கும் பயமின்றி சிலநாட்கள் தங்கலாம் என்று கூறியது.

எலியும் அதற்குச் சம்மதித்தது. இரண்டும் ஆமையிடம் சென்றன.

அவற்றை மகிழ்ச்சியோடு வரவேற்று இரை அளித்தது ஆமை.

அப்போது, ஒரு வேடனுக்குப் பயந்து ஒரு மான் ஓடிவந்தது.

எலி, காக்கை, ஆமை மூன்றும் மானுக்கு அடைக்கலம் தந்து நட்போடு வாழ்ந்தன. ஒரு நாள், வேடனின் வலையில் மான் அகப்பட்டுக் கொண்டது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்வில் நலமும் வளமும் பெற நல்லெண்ணங்கள் எனும் பொக்கிஷங்களைச் சேமியுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்

சிங்கள மக்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு.

ஆம், அவர்களிடம் சுயநலத்தைவிட பொது நலம் மேலோங்கியுள்ளது. அவ்வாறான மனப்பக்குவம் இருந்ததாலேயே அவர்கள் அரகலப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து இந்த நாட்டுக்கு இரண்டாவது தடவையாகச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தவன் நான் என்று மார்தட்டிய மகிந்த ராஜபக்ஷவையே சிங்கள மக்கள் ஓரங்கட்டினர்.

ஆட்சியாளர்கள் என்ற உயரிய ஸ்தானத்தில் இருந்து கொண்டு நாட்டைச் சூறையாடுகின்றவர்களை மன்னிப்பதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை.

அதனாலேயே ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை அவர்கள் ஓட ஓடத் துரத்தினர்.

இவ்வாறானதொரு நிலைமை மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு ஏற்படுமென எவரும் நினைத்திருக்கவில்லை.

அவ்வாறான நினைப்புக்குக் காரணம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த மகிந்த ராஜபக்ஷவை சிங்கள மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்ற அனுமானமே.

இந்த அனுமானத்தை உள்நாடு என்ற எல்லை கடந்து வெளிநாடுகளும் ஏற்றிருந்தன.

இங்குதான் சிங்கள மக்கள் தொடர்பிலான அனுமானங்கள் அறுந்து விழுகின்றன.

ஆம், சிங்கள மக்கள் நாட்டைப் பற்றிச் சிந்திப்பார்களேயன்றி தனிப்பட்ட செல்வாக்குகளுக்கு அடிபணிந்து நாட்டைக் கந்தறுப்பவர்களுடன் ஒருபோதும் சேர்ந்து பயணிக்க மாட்டார்கள்.

தேவையாயின், பேரினவாதிகளும் மதவாதிகளும் மகிந்த தரப்பைத் தூக்கித் தலையில் வைப்பார்களேயன்றி மற்றும்படி, சிங்கள மக்கள் நாடு என்பது பற்றியே சிந்திப்பார்கள் என்ற உண்மை அரகலப் போராட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

இதை நாம் கூறும்போது அந்தப் போராட்டம் மட்டும் சிங்கள மக்கள் சுயநலம் கடந்து நாட்டு நலத்தோடு பயணிப்பவர்கள் என்பதை உறுதி செய்யுமா? என்று யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் இல்லை. அரகலப் போராட்டத்தோடு மட்டும் சிங்கள மக்கள் தங்களின் பணியை முடிவுறுத்திவிடவில்லை.

மாறாக, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டின் அரச தலைவராக அநுர குமார திஸாநாயக்கவைத் தெரிவு செய்தனர்.

இந்தத் தெரிவு எந்தளவு தூரம் சிங்கள மக்களின் தூரநோக்கை – அவர்களின் அரசியல் அனுபவத்தை – இந்த நாட்டை யாரிடம் ஒப்படைத்தால், அதற்கு விமோசனம் கிடைக்கும் என்ற பன்முகப் பார்வையை உறுதி செய்துள்ளது.

இங்குதான் எங்கள் தமிழ் அரசியல் பற்றி நோக்கும்போது எமது அரசியல் என்பது சொந்த நலன் சார்ந்ததாக இருப்பதுடன் தத்தம் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக யார்? எவர்? என்று இம்மியும் பார்க்காமல் ஆதரவு வழங்குகின்ற துர்ப்பாக்கிய நிலைமை இருப்பதை உணர முடியும்.

இத்தகைய சுயநல சிந்தனைகளே எங்கள் தமிழ் இனத்தின் பெரும் பலவீனமாக உள்ளது.

அதன் காரணமாகவே இன்று நாம் அரசியல் தலைமையற்ற அநாதைகளாகியுள்ளோம். ஆக, தமிழ் மக்கள் சிங்கள மக்களிடம் இருந்து பலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு கற்றுக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. தப்பும் இல்லை.

# தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே வென்னப்புவவில் உலங்கு வானூர்தி விபத்து

## நீதிமன்ற விசாரணையில் துணை விமானி தெரிவிப்பு

(கொழும்பு)

வென்னப்புவப் பிரதேசத்தில் அண்மையில் விபத்துக்குள்ளான விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி, தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே கிங் ஓயாவில் தரையிறக்க நேரிட்டதாக அதன் துணை விமானி, லெப்டினன்ட் எரங்க சாமர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் மாரவில நீதிவான் தினிந்து சமரசிங்க முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இதன் போது சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு வென்னப்புவவுக்கு மேலே உலங்குவானூர்தி பறந்துகொண்டிருந்த போது, கிங் ஓயா பாலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்கள் கைகளை அசைத்து உதவி கோரியதாகத் துணை விமானி தெரிவித்துள்ளார்.

எனினும் அங்கு அதிகளவான மக்கள் கூடியிருந்தமை மற்றும் உயர் சக்தி மின் கம்பிகள் அமைக்கப்பட்டிருந்ததால் பாலத்தின் மீதோ அல்லது வீதியிலோ உலங்கு வானூர்தியைத் தரையிறக்க முடியவில்லை.

அவர் பொருத்தமான இடத்தில் தரையிறக்க முயன்றபோது, விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாக உயிரிழந்த பிரதான விமானி மற்றும் தமக்கு உணர முடிந்ததாக அவர் குறிப்பிட்டார்.

உலங்கு வானூர்தியைத் திருப்பிய மறுகணமே, அது கிங் ஓயாவுக்குள் திடீரென வீழ்ந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## பேரிடர் காரணமாக

## அழிவடைந்த வாகனங்கள் தொடர்பாக தகவல் சேகரிப்பு

ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக அழிவடைந்த வாகனங்கள் தொடர்பான தகவல்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருவதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதியின் பின்னர் மாவட்ட மட்டத்தில் இது தொடர்பான விசேட நடமாடும் சேவையொன்றை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

அதற்கமைய குறித்த தகவல்களின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் பரிசோதனைக்குட்படுத்தி அவை பயன்பாட்டிற்கு உகந்ததா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அனர்த்த நிலைமை காரணமாக சிலரது வாகனங்கள் மற்றும் ஆவணங்களும் அழிவடைந்துள்ளதாகவும் அந்தத் தகவல்களையும் பெற்றுக்கொண்டு உரிய எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி தாம் வசிக்கும் கிராமசேவகர் பிரிவின் கிராம உத்தியோகத்தருக்கு இது குறித்து அறிவிக்குமாறும், அவர் ஊடாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தெளிவுபடுத்தி பொலிஸ் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்வதும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டிய அவர் விசாரணைகளை ஆரம்பிப்பதற்குப் பல்வேறு துறைகள் மூலம் சரியான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது இந்த நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு முக்கியமானது எனவும் குறிப்பிட்டார். (ம-7)

# நாவலர் பெருமான் குருபூஜை வைபவம்

(நல்லூர்)

நல்லைநகர் ஆறுமுக "நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதியெங்கே" எனப் போற்றப்படும் அளவிற்கு சைவமும் தமிழும் தலைத்தோங்க அரும்பணியாற்றிய நல்லைநகர் ஆறுமுக நாவலரது குருபூஜை தினம் இன்றாகும்.

அதன் ஓரங்கமாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் பெருமானின் குருபூஜை வைபவம் நடைபெறவுள்ளது. (ம-7)

## சாவகச்சேரி நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

குறித்த ஏலத்தில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றால் அரசுடமையாக்கப்பட்டதுடன் இதுவரை உரிமை கோரப்படாத இரட்டைப்பாவனை 207 டாட்டா வாகனம், டக்டர்பெட்டி, மோட்டார் சைக்கிள்கள், மணல், காஸ் சிலிண்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், நூற்றிற்கும் அதிகமான துவிச்சக்கர வண்டிகள் உட்பட இதர பொருட்கள் பகிரங்க மற்றும் பிராந்திர ஏல விற்பனைகளில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலத்தில் கலந்து கொள்ளவுள்ளவர்களுக்கான நடைமுறைகளை நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினை புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 16.12.2025 மற்றும் 17.12.2025 ஆம் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என்றுள்ளது. (ம-7)

## மீன் பிடிக்கச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

### பண்டத்தரிப்பில் சம்பவம்

பண்டத்தரிப்பில் மீன் பிடிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இதில் கீரிமலை வீதி, விளாவெளியைச் சேர்ந்த வாமதேவன் கோகுலதேவ் (வயது- 33) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மேற்படி குளத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) மீன்பிடிப்பதற்காக மூன்று இளைஞர்கள் சென்ற நிலையில் மேற்படி இளைஞன் தூண்டிலை நாலுடன் சேர்த்து குளத்தில் வீசிய நிலையில் அதை எடுக்கச் சென்றபோது குளத்தில் மூழ்கிக் காணாமல் போயிருந்தார்.

அப்பகுதி மக்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் காணாமல்போன இளைஞனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை (09) காலை காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து வருகை தந்த எட்டு சுழியோடிகளே குளத்தில் இருந்து இளைஞரின் சடலத்தை மீட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம்ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இளவாலைப்பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் 300 ஏக்கர் நெற்பயிர்கள் வெள்ளத்தால் அழிவு

(பூநகரி)

பூநகரி பிரதேச எல்லைக்குள் காலபோக விதைப்பில் 12 ஆயிரத்து 600 ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளதாக கம நலசேவை நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலப் பரப்பில் 2 ஆயிரத்து 889 விவசாயிகள் நெற்பயிர் செய்துள்ளார்கள்.

அத்துடன் காலபோக உரமானியமாக அதற்குரிய பணம் சென்ற வாரம் தொடக்கம் படிப்படியாக விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு வைப்பிலிடப்படுகின்றது.

இதே நேரம் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் கறுக்காய்த் தீவு, இலந்தைக் குளம், தீவெளி ஆகிய பகுதிகளின் 300 ஏக்கர் நெற்பயிர்கள் வெள்ளத்தால் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (8-84)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குநர்களை பதிவு செய்தல் -2026

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2026 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்துவிண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகி தாதிகள், எழுதுபொருட்கள் . உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் . மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A-17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

- வழங்கல்கள் 2026ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ. 1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2026" எனக்குறிப்பிட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு 31.12.2025ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை 021 224 0017 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம்.

(C-4535)

## கரைச்சி பிரதேசசபை - கிளிநொச்சி
### தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2026

1. கரைச்சி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு பாதுகாப்பு சேவையினை (Security Service) பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

2. **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 2025.12.10 - 2025.12.23 மு.ப 9.00 - பி.ப 14.00 மணிவரை**

   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 2024.12.24 மு.ப 9.00- மு.ப 11.00 மணிவரை**

   **கேள்வி திறக்கும் திகதி - 2025.12.24 மு.ப 11.00 மணி**

3. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
4. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சியில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 14.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனையும் மீளளிக்ககூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவத்தில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு "தலைவர், பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைச்சி பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | பாதுகாப்பு சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணிஎண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 01 | தலைமை அலுவலகம் | 02 | - | 2026.01.05 தொடக்கம் 2027.01.04 வரை |
| 02 | வாகன சுத்திரிகரிப்பு நிலையம் நாகபூசணி அம்மன் வீதி, திருநகர், கிளிநொச்சி | 01 | 01 | |
| 03 | தீயணைப்புப்பிரிவு, A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி | 01 | 01 | |
| 04 | கிளி சேவைச்சந்தை, கிளிநொச்சி | 02 | - | |
| 05 | முரசுமோட்டை உபஅலுவலகம் | 01 | - | |
| 06 | வட்டக்கச்சி நூலகம், வட்டக்கச்சி | 01 | - | |
| 07 | பேரூந்து நிலையம்– கிளிநொச்சி | 01 | 01 | |
| மொத்தம் | | 09 | 03 | |

தலைவர்,
பெறுகைக்குழு,
கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.

2025.12.10

(C-4534)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப்...

நடைபெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## 1.8 மில்லியன்...

விடுவித்துள்ளது.

இந்த நிதி மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு அத்தியாவசிய நிவாரண உதவிகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் என ஐரோப்பிய ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த 1.8 மில்லியன் யூரோ நிதியிலிருந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பின் அனர்த்தப் பதிலளிப்பு அவசர நிதியத்தின் மூலம் 500,000 யூரோ அனுப்பப்பட்டுள்ளது. (ம-7)

## பேரிடர் நிவா...

கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக்கூறி, பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து தனிப்பட்ட தகவல்களை சில மோசடிக்காரர்கள் சமூகவலைத்தளங்கள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்பி பணம் பெறும் சம்பவங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன.

பேரிடருக்குப் பின்னரான நிவாரண செயற்பாடுகளுக்கான தகவல் சேகரிப்பானது அமைச்சுடன் இணைந்த கள அலுவலர்கள் மற்றும் கிராம சேவகர்களுடன் இணைந்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக மாத்திரமே இடம்பெறுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் தமது தனிப்பட்ட தகவல்களை மோசடிக்காரர்களிடம் பகிர்வதைத் தவிர்க்குமாறும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## பேருந்திலிருந்து...

தைச் சேர்ந்த கருப்பையா சிவகுமார் (வயது-35) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தார்.

இதன்போது செம்மணிப் பகுதியில் வந்துகொண்டிருக்கும்போது பேருந்தின் மிதிபலகையில் நின்றவாறு முகம் கழுவ முயற்சித்துள்ளார். இதன்போது பேருந்து செம்மணி வளைவில் திரும்பும்போது கீழே விழுந்து படுகாயமடைந்து மயக்கமுற்றுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## யாழ்ப்பாணப்...

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் 2026 மார்ச் மாதம் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளரால் கடந்த செப்ரெம்பர் முதல் வாரத்தில் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் நேற்று 09ஆம் திகதி நடைபெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்கள் விண்ணப்பங்களையும், அளிக்கைகளையும் மதிப்பீடு செய்து தனித்தனியாகப் புள்ளிகளை வழங்கினர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி முதல் நிலையையும், விவசாயபீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான கு.மிகுந்தன், மருத்துவ பீடாதிபதியும், பேராசிரியருமான இ.சுரேந்திரகுமார் ஆகியோர் முறையே இரண்டாம் மூன்றாம் நிலைகளையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின்படி, பேரவையின் விசேட கூட்டத்தில் விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளி ஒழுங்கில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி - ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்து துணைவேந்தராக நியமனம் செய்வார். (ம-7,33)

## மன்னார்...

ஹூடாக செல்லும் பறங்கி ஆறு, சிப்பி ஆறு மற்றும் பாலி ஆறு ஆகியவற்றின் நீர்மட்டம் குறிப்பிட்ட அளவு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே ஆற்றின் தாழ்நிலப் பிரதேசங்களான சீது விநாயகர், கூராய், தேவன் பிட்டி, ஆத்திமோட்டை, அந்தோணியார்புரம், பாலி ஆறு ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்கவும்.

கால்நடை மேய்ப்பர்களும் வெள்ள அனர்த்தத்தில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் உங்கள் கால்நடைகளைப் பராமரிக்கவும் தொடர்ச்சியாக வழங்கப்படும் முன்னெச்சரிக்கைகளை கவனித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

## விப...

ஜேர்மனியில் விபரீத முடிவெடுத்த யாழ். இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த புஸ்பராசா சுஜான் (வயது-25) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் இரண்டு வருடங்களுக்கு முன் ஜேர்மனி சென்று அங்கு அகதி எனப் பதிவு செய்தார்.

அதன் பின்னர் ஜேர்மன் அதிகாரிகள் அவரை அகதி முகாமில் தங்க வைத்தனர்.

விசா இன்மை, வேலையின்மை, தனிமை, மொழிப் பிரச்சினை, நண்பர்கள் இன்மை போன்ற காரணங்களினால் இளைஞர் மனவிரக்திக்குள்ளாகி அடிக்கடி குடும்பத்தினருக்குத் தான் மீண்டும் ஊருக்கு வரப்போகின்றேன் என்று கூறி வந்ததாகக் கூறப்படுகின்றது.

குடும்பத்தினரும் போன காசை உழைத்துக்கொண்டு வா என்று ஆறுதல் கூறியுள்ளனர்.

இந்நிலையில் இளைஞன் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் முகாமில் தூக்கிட்டு உயிரிழந்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.12.09
சீட்டிழுப்பு இலக்கம் 6038
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: C 0 1 3 5 9 5

சுப தவசக
திகதி 2025.12.09
சீட்டிழுப்பு இலக்கம் 0154
கன்னி 13 56 64 — 2912

தன நிதானய
திகதி - 2025.12.09
சீட்டிழுப்பு இலக்கம் - 2068
U 06 11 16 28 U

மெகா பவர்
திகதி 09/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2386
T 12 13 41 66 73

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4280
சீட்டிழுப்பு திகதி 09.12.2025
P 02 05 35 62 — P

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.09
சீட்டிழுப்பு இலக்கம் 1347
தனுசு 19 45 52 59 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.12.2025 — வெற்றி வாரம் 0746
ஆங்கில எழுத்து G — மற்றும் வெற்றி இலக்கம் 3 1 1 8 7 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,116,837.20

Super Ball
சீட்டிழுப்பு வாரம் 3012
சீட்டிழுப்பு திகதி 2025.12.09 — தினம் செவ்வாய்க்கிழமை
01 27 31 40 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,148,926.40

சனிதா
திகதி 09.12.2025 — வெற்றி வாரம் 5173
22 46 62 72 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,582,640.80

சசிரி
வெற்றி வாரம் 842 — சீட்டிழுப்பு திகதி 09.12.2025 — செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 26 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4724
சீட்டிழுப்பு திகதி 09.12.2025 — தினம் செவ்வாய்க்கிழமை
01 02 05 23 — ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,299,612.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 30 21 37 44 68
சீட்டிழுப்பு வாரம் 2188 — 09.12.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.611,853,575.40

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2838 — சீட்டிழுப்பு திகதி 2025.12.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,462,420.00
03 30 58 73 U

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4540)

**076 825 7716** (ஆகாஸ்)



## துப்பரவுத் தொழிலாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள கோவில் ஒன்றிற்கு துப்பரவுத் தொழிலாளர் தேவை. வயது : 25 – 50 (6072)

**075 759 9546**



## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**



## School Service

உரும்பிராயில் இயங்கும் சிறுவர் முன்பள்ளி (Kids park) க்கு அளவெட்டியிலிருந்து School service தை மாதத்திலிருந்து ஆரம்பமாகிறது. செல்ல விரும்புவோர். முற்பதிவு செய்து கொள்ளவும். (அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம்) (6112)

**077 609 6581**



## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3600/- |
| 11-16 Kg | 2630/- |
| 21-22 Kg | 2390/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery (C-4539)

o UK 11Kg - 1400/- o France 11Kg - 2180/- o Germany 11Kg - 2030/-
o Swiss 11Kg - 2530/- o Australia 11Kg - 2180/- o Italy 11Kg - 2310/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நவக்கிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் – புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியுடன்
- செம்மண் தரை, நிலப்பரப்பு, குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நிலாவரைக்கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 10 Km

(6113)

தொடர்பு :
**076 860 2770, 076 987 8617**



## பதவி வெற்றிடங்கள்

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.**
**ஆண், பெண் இருபாலாரும்.**
**வேலை இடம் : யாழ்ப்பாணம்**
**வயதெல்லை : 23 - 55**
**நேர்முகத்தேர்வு : 11.12.2025, 12.12.2025, 13.12.2025**
**(காலை 10 மணி முதல் மாலை 4.00 மணிவரை)**
**இடம் : இல.758, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.**
**ஆவணங்கள்**

1. பிறப்புச்சான்றிதழ் பிரதி
2. தேசிய அடையாள அட்டைப் பிரதி
3. கல்வித் தகைமை (O/L) சான்றிதழ் பிரதி
4. கிராமசேவகர் நற்சான்றிதழ் மூலப்பிரதி

(C-4531)

**EPF + ETF உடன் 2100 சம்பளம் வழுங்கப்படும்.**



## Voyzant இந்தியா கோவில்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம் |
| சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர் |
| திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரப்பாணி |
| திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர் |

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
**189,000/=** (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு) (C-4492)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள் | மேலதிக விபரங்களுக்கு: **Voyzant (PVT) Ltd** | புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
**077 284 9535, 021 222 6866** (நிபந்தனைகளுக்குட்பட்டது)


# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1935.07.09
விண்ணில் 2018.11.28

அமரர்
## திருமதி சங்கநிதி தபானந்தம்

மண்டைதீவு -6
திதி: அபரபக்க ஷஷ்டி

அம்மா,... என்ற அரிதான பொக்கிஷமே!
அவனிதனிலே பிறந்து அமரராகிச் சென்று
ஆண்டு ஏழு வந்ததுவே,
அன்னையே! அழியாத அழகான நின் வாழ்வை
அசைபோட்டுப் பார்க்கையிலே
தங்க மனம் கொண்ட தவத்தாருடனே,
காதலால் கரம்பற்றி கண்ணியமாய்
அன்றில் பறவைகளாய் இணை பிரியா
தம்பதிகளாய் வாழ்ந்து சென்றீர்கள்,
தயவான கண்மணியே அம்மாவே!
உமைபாகதீசன் கழலடியில் சரணடைந்த
அம்மை, அப்பனே! எமை எலாம் ஆசீர்வதியுங்கள்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(1788)

பொற்பதி வீதி, கொக்குவில்.
(மண்டைதீவு – 06)

உம் நினைவில் வாழும்
குடும்பத்தினர்


## Vacancy for the post of Community Health Workers

Cancer Aid North & East (CANE) Sri Lanka is a volunteer organization dedicated to cancer control, palliative care, and end-of-life care services. CANE initiated the Cancer Early Detection Project in the Kilinochchi District earlier this year and plans to expand its services to the Jaffna District from next year. This project is implemented through the Cancer Early Detection Centre (CEDC) at the Teaching Hospital, Jaffna, and funded by the International Medical Health Organization (IMHO-USA) and Jaffna Medical Faculty Overseas Alumni (JMFOA) International.

**We invite applications from suitably qualified individuals for the following position:**

**1. Community Health Worker (Female)**

**o Vacancies: 02 posts**

**o Requirements:**

- Preference will be given to those who have experience in community-based health projects.
- The candidate must be residing in Jaffna district (preferably the island areas).
- Responsibilities include facilitating medical screening programs at the community level and working closely with existing government health systems.

**o Remuneration: LKR 35,000 (fixed) per month all-inclusive salary.**

**General Conditions for the post:**

- Candidate Must be a Sri Lankan citizen with excellent Tamil language skills.
- Preference will be given to the candidates who own a motorbike and hold a valid riding license.
- All the selected candidates will become contributors to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), in which case, the employee should contribute 8% of the monthlysalary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETFrespectively.
- The appointment will be made initially for six months and extendable based on the performance and availability of funds.

**Application Instructions:**
**Interested candidates are requested to send their updated CV on or before 22 nd December 2025-, to:**
**Email: Cane_jaffna@yahoo.com OR**
**Mail: CANE Sri.Lanka, No. 05, Sabapathipillai Lane, Uduvil, Chunnakam.**

(C-4536)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.